தள்ளி கிராம பஞ்சாயத்து

–எதிர்–

இந்திய ஒன்றியம் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.383–384/2022)

11.07.2022

[மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜயா ஒய். சந்திர சூட்

மற்றும் மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எஸ்.போபண்ணா]

தேசிய பசுமை தீர்ப்பாய சட்டம், 2010 – பிரிவு 4(4)(இ) – தேசிய பசுமை தீர்ப்பாயம் (நடைமுறை மற்றும் செயல்முறை) விதிகள் 2011 – விதி 3–ல் திருத்தம் – 2011–ஆம் ஆண்டு நடைமுறை விதிகள் பிரிவு 3–ல், விதிவிலக்கான சூழ்நிலைகளில் தனி நபர் உறுப்பினர் அமர்வை அனுமதிக்கப்படும் வகையில், அறிவிப்பு மூலம் ஒரு விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது – இந்த அறிவிப்பு 11.01.2018 அன்று உச்சநீதிமன்றத்தில் எதிர்கொள்ளப்பட்டது, இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் 2010–ம் ஆண்டு சத்தத்தோடு ஒட்டி எதிர்க்கப்பட்ட விதியை சரிசெய்யப்படும் என்று உறுதியளித்தார் – ஆயினும், 29.01.2018 அன்று தே.ப.தீ.,–ல் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த காலதாமத மனுவை ஏற்புடையதாக கொள்ள கோரிய மனுவை தேசிய பசுமை தீர்ப்பாய தனி நபர் உறுப்பினர் தள்ளுபடி செய்தார் – அரசு உத்தரவு செல்லுமா என்ற மனுவை 31.01.2018 அன்று உச்சநீதிமன்றம், தே.ப.தீ., தலைவருக்கு தனி நபர் உறுப்பினர் விசாரணை அமைப்பு ஏற்படுத்தலாகாது என்றும் ஒவ்வொரு அமர்விலும் ஒரு நீதித்துறை உறுப்பினரும், ஒரு வல்லுநர் உறுப்பினரும் இருக்கவேண்டும் என உத்தரவிட்டது – மேல்முறையீட்டாளர் தனி நபர் உறுப்பினர் பிறப்பித்த 29.01.2018 தேதியிட்ட உத்தரவை திரும்பபெறக்

கோரியும் காலதாமதத்தை ஏற்புடையதாக கோரியும் விண்ணப்பித்தார் – தீர்ப்பாயம் 16.07.2021 அன்று இரு விண்ணப்பங்களையும் தள்ளுபடி செய்தது – மேல்முறையீட்டில் முடிவானது: காலதாமதத்தை ஏற்றுக்கொள்ளக்கோரும் விண்ணப்பத்தை நிராகரித்த தனி நபர் தே.ப.தீ., உறுப்பினர் மற்ற வழக்குகளில் நீதிமன்ற உத்தரவு இடுவதில் இருந்து விலகி தனி நபர் உறுப்பினர் அமர்வுக்கு தடை இருப்பதாக கூறி உத்தரவிடவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்தார் – தே.ப.தீ.,–க்கு தகுதி தேவை என்பதோடு மாறாத்தன்மை உடைய செயல்பாடு தேவை, இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் உச்சநீதிமன்றத்தில் உறுதி கொடுத்த பிறகு, இது எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. உச்சநீதிமன்ற உத்தரவு, தேதி 31.01.2018–ல் சொற்றொடர் விருப்புவதாவது, தனி நபர் உறுப்பினர் அமர்வு உருவாக்கப்பட்டது விதியின் மூலம் தரப்பட்ட அதிகாரம் மூலம் ஏற்படுத்தியதை தடை செய்வது – தனி நபர் அமர்வு கொண்ட அனுமானம் ஆக கொண்ட வரையறை தெளிவாக இது முரணானது என காட்டுகிறது – சட்டப்பிரிவு 4(4)(இ)–ஐ பயன்படுத்தி தனி நபர் உறுப்பினர் உத்தரவு இட்டு இருத்தல் கூடாது – 16.07.2021 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மற்றும் அசல் உத்தரவு 29.01.2018 தேதியிட்ட தே.ப.தீ.,–ன் உத்தரவு, இவை நீக்கறவு செய்யப்படுகின்றன.

மேல்முறையீடுகளை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:

1. தே.ப.தீ–ன் தனி நபர் உறுப்பினர், காலதாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை 29.01.2018 அன்று தள்ளுபடி செய்தார், மற்ற வழக்குகளில் தனி நபர் அமர்வை அமைக்க தடை இருப்பதாக கூறி நீதிமன்ற உத்தரவை பிறப்பிக்காமல் விலகி இருந்தார். மற்ற வழக்குகளிலும் (ராஜ்பாவ் பவார் –

எதிர்– கோவா மாநில அரசு சார்பாக அதன் தலைமைச் செயலாளர் (அ.வி.எண்.97/2016); கோவா பவுண்டேஷன் –எதிர்– கோவா மாநில அரசு இ.ஐ.ஏ.ஏ.(அ.வி.எண்.33/2015)) இதே போல உத்தரவுகள் இடப்பட்டன, மேல்முறையீட்டாளரின் காலதாமதத்தை மன்னிக்கக் கோரும் விண்ணப்பத்தை தனி நபர் உறுப்பினர் தள்ளுபடி செய்தார், ஆனால் மற்ற வழக்குகளில் இந்த நீதிமன்றத்தில் இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் அளித்த வாக்குறுதி காரணமாக எந்த உத்தரவையும் இடவில்லை. 11.01.2018 அன்று இந்நீதிமன்ற உத்தரவு குறிப்பிடுவதாவது, எதிர்க்கப்பட்ட விதியை சட்டப்படியும், இந்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளை ஒட்டி சரி செய்யப்படும் என இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் வாக்குறுதி தந்ததாக உள்ளது. குறிப்பாக எந்த பதிவும் தடை உத்தரவையும் இந்நீதிமன்றம் விதித்ததாக இல்லை என்பது உண்மை. இந்நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்குரைஞர் முழுமையான வாக்குறுதியை மூல சட்டம் மற்றும் இந்நீதிமன்றத்தின் முடிவுகளுக்கு ஏற்ப ஒத்துப்போகும்படி திருத்தம் செய்யப்படும் என்ற அவரது அணுகுமுறை உணரப்படுகிறது. அறுதியிடப்பட்ட கோட்பாடு என்பது ஒப்படைவு பெட்ரா சட்டம் இயற்றுதல், அதனை இயற்ற அனுமதித்த சட்டங்களுக்கு ஒத்ததது போல இருக்கவேண்டும் என்பதே நிறைவானது ஆகும். ஒரு விதியானது, அதிகார மூலத்திற்கு மேலாக இருத்தலாகாது. அரசு தரப்பு தலைமை வழக்குரைஞர் இந்நீதிமன்றத்தின் முன்பு உறுதியளித்து, அது அறியப்படும்பொழுது தே.ப.தீ–யில் ஒரு நிலையான சட்ட நடவடிக்கை பின்பற்றப்படும் என்று உரிமையாளர் உறுதியளித்தார். 31.01.2018 அன்று இந்நீதிமன்றம் உத்தரவிட்டதாவது "இதனிடையே, தனி நபர் உறுப்பினர் அமர்வை தலைவர் உருவாக்கலாகாது....." "இதனிடையே" என்ற சொற்றொடர் விளக்குவதாவது, சட்டம் மற்றும் தீர்ப்புகளுடன் விதியின்

முரண்பாடு குறித்து நிர்வாகம் ஆலோசிக்கும் சமயத்தில் அதை செயல்படுத்துவதில் தடையுள்ளது என்பதாகும். இந்நீதிமன்றத்தின் உத்தரவில் உள்ள சொற்றொடர் விரும்புவதாவது, விதி வழங்கியுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி தனி நபர் உறுப்பினர் அமர்வு உருவாக்குவதில் தடை இருக்கும் என்பதை இது தெரிவிக்கிறது. தனி நபர் உறுப்பினர் அமர்வின் அதிகார வரம்பு குறித்த ஊகம் பிழையானது என தெளிவாக தெரிகிறது. தே.ப.தீ., சட்டம் 2010–ன் பிரிவு 4(4)(இ)–ன்படி நீதி சார்ந்த உறுப்பினர்களுக்கு இணையாக வல்லுநர் உறுப்பினர்கள் இருக்கவேண்டும் அல்லது ஒருவரது அமர்வில் இருந்து விசாரிக்க வேண்டும் என வழிமுறை உள்ளதால் தனி நபர் உறுப்பினர் உத்தரவு பிறப்பித்து இருத்தல் கூடாது. [பத்தி 12] [133–எப்; 134–ஏ–எப்]

சேவ் மான் ரீஜன் பெடெரேஷன் –எதிர்– இந்திய ஒன்றியம் 2013 (1) ஆல் இந்தியா என்.ஜி.டி. ரிப்போர்ட்டர் 1; கோவா பவுண்டேஷன், அதன் செயலர் மூலம் –எதிர்– கோவா சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (அ.வி.எண்.156/2016); ராஜ்பாவ் பவார் –எதிர்– கோவா மாநில அரசு சார்பாக அதன் தலைமைச் செயலாளர் (அ.வி.எண்.97/2016); கோவா பவுண்டேஷன் – எதிர்– கோவா மாநில அரசு இ.ஐ.ஏ.ஏ.(அ.வி.எண்.33/2015) – பார்வையிடப்பட்டது.

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.383–384/2022

தேசிய பசுமை தீர்ப்பாய முதன்மை அமர்வு எம்.ஏ.எண். 03/2019 மற்றும் எம்.ஏ.எண். 04/2019 ஆகியன எம்.ஏ.எண்.262/2017–இல் மேல்முறையீடு எண்.36/2017(மே.ம.)–ல் உள்ள வழக்கின் தீர்ப்பு மற்றும் உத்தரவில் இருந்து.

சஞ்சய் பரிக்ஹ், மூத்த வழக்குரைஞர், அபிமனு ஷ்ரேஸ்தா, சாத்விக் பரிக்ஹ், திவ்யான்ஷ் குரானா, சிவம் தோமர் – மேல்முறையீட்டாளர் வழக்குரைஞர்கள்.

செல்வி. ஐஸ்வர்யா பாத்தி, அரசு கூடுதல் வழக்குரைஞர், முனைவர் ஏ.எம்.சிங்வி, மூத்த வழக்குரைஞர், செல்வி ருச்சி கோஹ்லி, செல்வி. ஸ்வரூபமா சதுர்வேதி, திக்விஜய் தாம், செல்வி. பூர்ணிமா சிங், ஜி.எஸ்.மக்கார், செல்வி. வனிதா பார்கவா, அஜய் பார்கவா, செல்வி. ஸ்வேதா கப்ரா, செல்வி. பிரேர்னா சிங், தி/ள்.கைத்தான் மற்றும் கம்பெனி, செல்வி. அர்ச்சனா பதக் தவே, செல்வி. ஆஸ்தா மேத்தா, செல்வி. தீபன்விதா பிரியங்கா – எதிர்மேல்முறையீட்டாளர்கள் வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜயா ஒய். சந்திர சூட், அவர்களால் பகரப்பட்டது.

1. தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (தே.ப.தீ) 16.07.2021 தேதியிட்ட உத்தரவிலிருந்து இம்மேல்முறையீடுகள் எழுகின்றன. மேல்முறையீட்டாளர் 05.01.2017 தேதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அல்ட்ரா டெக் சிமெண்ட் லிமிடெட் நிறுவனத்துக்கு (4–வது எதிர்மேல்முறையீட்டாளர்) வழங்கப்பட்ட சுற்றுச் சூழல் தடை நீக்கத்தை எதிர்த்தார். தே.ப.தீ., அதன் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம், தனி நபர் உறுப்பினரின் உத்தரவை திரும்பப்பெறும் மற்றும் காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பங்களை தள்ளுபடி செய்தது.

2. குஜராத் மாநிலம், பாவ்நகர் மாவட்டத்தில் தலேஞ்சா தாலுக்காவில் அமைந்துள்ள தள்ளி மற்றும் பம்போர் கிராமங்களில் ஆண்டுக்கு 0.53 மில்லியன் டன் அளவிலான மொத்த உற்பத்தி செய்யும் சுண்ணாம்புக்கல் சுரங்கம் தோண்டுவதற்காக, சுற்றுச் சூழல் தடை நீக்க கடிதத்தை 05.01.2017 தேதியிட்டு மத்திய சுற்றுச் சூழல், வனம் மற்றும்

பருவநிலை மாற்ற அமைச்சகம் (எம்.இ.எப்.சி.சி.) நான்காம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு வழங்கி உள்ளது. நான்காம் எதிர்மேல்முறையீட்டாளர் 09.01.2017 தேதியிட்ட கடிதம் மூலம் 12.01.2017 அன்று சூழல் தடையில்லா சான்றின் நகல் ஒன்றை கிராம பஞ்சாயத்தின் வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்தார். மேலும், நான்காம் எதிர்மேல்முறையீட்டாளர், சுற்றுச்சூழல் தடை நீக்க அனுமதி வழங்கப்பட்டதன்பேரில், 11.01.2017 அன்று குஜராத்தி மொழியில் சௌராஷ்ட்ரா சமாச்சார் மற்றும் ஆங்கில மொழியில் குஜராத் சமாச்சார் என்ற நாளிதழ்களில் ஒரு பொது அறிவிப்பை வழங்கினார். தே.ப.தீ சட்டம், பிரிவு 16–ன்படி மேல்முறையீட்டாளர் (மேல்முறையீடு எண்.36/2017) நான்காம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் தடை நீக்க அனுமதியை பல்வேறு மற்றும் கீழ்கண்ட காரணங்களின்பேரில் மறுத்தார்:

அ) இந்தப்பகுதியானது ப்ருஜர் கிர் என்று அறிவிக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாகும். இப்பகுதி சம்பந்தப்பட்ட திட்டத்திற்காக தடை செய்யப்பட்டுள்ளது.

ஆ) மொத்த பகுதியான 193.3269 ஹெ.ரில் 155.3269 தனிப்பட்ட விவசாய நிலமாகும். சுரங்கங்கள் மற்றும் கனிம பொருட்கள் சட்டப்படி அனைத்து நில உரிமையாளர்களிடமும் கட்டாயம் சம்மதம் பெறவேண்டும் என்பதை திட்ட ஏற்பாட்டாளர்கள் செய்யவில்லை. அத்தீர்முடிவு, அரசமைப்பு சட்டத்தின் வகுமுறைக்கூறு 300 (அ)–ன்படி அவர்களது நில உரிமை பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றிருக்கையில், அந்நடைமுறையில் நில உரிமையாளர்களுக்கு எந்த வாய்ப்பும் அளிக்கப்படவில்லை என்பதாகும்.

இ) அப்பகுதியானது, நீர்ப்பாசனத்திற்காகவும், குடிநீருக்காகவும் திட்டமிடப்பட்ட, நான்கு கட்டமைப்புகள் கொண்ட நீர்ப்பிடிப்பு பகுதிக்கு உட்பட்டதாகும்.

ஈ) சுரங்க அனுமதி தரப்பட்டால் சூழ்நிலை மற்றும் சுற்றுச்சூழலுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படுவதோடு, கிராமத்தினரின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்திலும் பாதிப்பு ஏற்படும்.

3. மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டை, உரிய காலமான 30 நாட்களுக்குப் பிறகு தாக்கல் செய்ததால் காலதாமதத்தை (எம்.ஏ.262/2017–ல் மே.எண்.36/2017) மன்னிக்கக்கோரி விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு அனுமதி பெற்றார். நான்காவது எதிர்மேல்முறையீட்டாளர், நாளிதழ்களில் 11.07.2017 அன்று பொது அறிவிப்பு செய்ததாகவும், கிராம வருவாய்த்துறை அலுவலருக்கு 12.01.2017–ல் கடிதம் தந்திருப்பதாகவும், எனவே, அந்த நாள்முதல் வரையறுக்கப்பட்ட காலமானது கணக்கில் கொள்ளப்பட வேண்டும் என்றும் வாதுரைத்தார். சேவ் மான் ரீஜன் பெடெரேஷன் –எதிர்– இந்திய ஒன்றிய அரசு (2013 (1) ஆல் இந்தியா என்.ஜி.டி. ரிப்போர்ட்டர் 1) என்ற வழக்கில் பொருள்விளக்கப்பட்டுள்ளவாறு இந்த அறிவிப்பான் சுற்றுச்சூழல் விளைவு அளவீடு கூறு 10–ன்படி ஒத்துப்போகவில்லை என்று மேல்முறையீட்டாளர் வாதிட்டார். இணைய தளத்தில் சுற்றுச்சூழல் தடை நீக்கச் சான்றிதழ் பற்றி பதிவேற்றம் செய்து, பொதுமக்கள் அதனை பதிவிறக்கம் செய்து பார்வையிடுமாறு செய்திருக்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் வாதிட்டார். 24.11.2017 அன்று மேல்முறையீடு மற்றும் காலதாமதத்திற்கான விண்ணப்பமும் கேட்கப்பட்டன. (மேற்படி) சேவ் மான் ரீஜன் பெடெரேஷன், என்ற வழக்கின் சட்ட நிலைப்பாட்டை

கருத்தில்கொண்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட சுற்றுச்சூழல் தடை நீக்க சான்றிதழ் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பதிவிறக்கம் செய்யலாமா என்பதைக் குறித்து தீர்ப்பாயம் விளக்கம் கோரியது.

4. 01.12.2017 அன்று மத்திய அரசின் எம்.இ.எப்.சி.சி. அமைப்பு ஆனது அறிவிக்கை ஜி.எஸ்.ஆர். எண்.1473(ஈ) அறிவிக்கை மூலம், தேசிய பசுமை தீர்ப்பாய (பயிற்சி மற்றும் நடைமுறை) விதிகள் 2011–இல் (2011 விதிகள்) திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. அறிவிக்கை மூலம் விதி 3/2011–ல் ஒரு வரம்புரை சேர்க்கப்பட்டு, அது, தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில், தனி நபர் உறுப்பினர் அமர்வை அமைக்க அனுமதிக்கிறது. விதி 3/2011–ல் திருத்தப்பட்ட அறிவிக்கை பின்வருமாறு:–

> "தீர்ப்பாயத்தின் அமர்வுஅல்லது வெவேறு பொது இடம் அல்லது இடங்களில் வியாபார பரிவர்த்தனை:– (1) தலைவர், இரண்டு அல்லது அதிக உறுப்பினர்களுடன் குறைந்தபட்சம் ஒரு நீதித்துறை உறுப்பினர் மற்றும் ஒரு வல்லுநர் கொண்ட அமர்வை உருவாக்கலாம்.
>
> [வரம்புரையாக:– தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில் தலைவர் ஒரு தனி நபர் உறுப்பினர் அமர்வை அமைக்கலாம்.]"

5. அதைத்தொடர்ந்து, தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தலைவர், விதி 3(1)/2011–ன்படி அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, அலுவலக உத்தரவு தேதி 05.12.2017–ன் மூலம், உறுப்பினர்களின் பற்றாக்குறை காரணமாக, பிராந்திய அமர்வுகளில் தனிநபர் உறுப்பினர் அமர்வுகளை அமைத்தார். அலுவலக உத்தரவு பின்வருமாறு:–

"தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (நடைமுறை மற்றும் செயல்முறை) விதிகள் 2011–ல் உள்ள விதி 3(1)–ன் சட்டதிருத்தமான மைய அரசின் சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் 01.12.2017 தேதியிடப்பட்ட அரசிதழிளில் அறிவிப்பு ஜி.எஸ்.ஆர். எண்.1473 (ஈ)–ன் அதிகாரத்தை செலுத்தி, தவிர்க்க இயலாத காரணங்களால், தேசிய பசுமை தீர்ப்பாணையத்தில் உறுப்பினர்களின் பற்றாக்குறை காரணமாக, தீர்ப்பாயத்தின் பிராந்திய அமர்வுகளில் தனிநபர் உறுப்பினர் அமர்வை அமைப்பது அவசியமாக உள்ளது. அவ்வாறே, தனி நபர் உறுப்பினர் அமர்வு ஒன்று தே.ப.தீ., தெ.ம.பி (சென்னை), தே.ப.தீ., ம.ம.பி (போபால்), தே.ப.தீ., மே.ம.பி.(புனே) மற்றும் தே.ப.தீ. கி.ம.பி. (கொல்கத்தா) என சட்டப்படி தீர்ப்பாய பணிகளை செய்ய அதிகாரம் அளித்து உருவாக்கப்பட்டன."

6. 01.12.2017 தேதியிடப்பட்ட அறிவிப்பும் மற்றும் 05.12.2017 அன்று தே.ப.தீ., தலைவரால் வழங்கப்பட்ட அலுவலக உத்தரவை எதிர்த்து, 2010 சட்டத்தின் பிரிவு 4(4)(இ)–க்கு எதிராக உள்ளது என்ற காரணத்தின்பேரிலும், அது ஒவ்வொரு அமர்வும் நீதித்துறை மற்றும் வல்லுநர் உறுப்பினர்களை சமமாக அமைக்க கோருகிறது என்பதன் பேரிலும்,தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (மேற்கு அமர்வு) வழக்குரைஞர்கள் சங்கம், அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 32–ன் கீழ் மனு (நீ.பே(உ) எண். 1235/2017)–ஐ தாக்கல் செய்தது. இந்த நீதிமன்றம் இந்த மனுவை 11.01.2018 அன்று விசாரித்து கீழ்கண்ட உத்தரவுகளை பிறப்பித்தது:–

"திரு.கே.கே.வேணுகோபால், கற்றறிந்த இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களுக்கு உதவியாக திரு. பி.எஸ்.நரசிம்மா, அரசு கூடுதல் வழக்குரைஞர் அவர்களிடம் இந்த மனுவின் நகல்

ஒன்றை தரவேண்டும். எதிர்ப்புக்குள்ளான விதி சட்டத்திற்கு இணங்கியும், இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் கருத்துக்கிணங்கியும் திருத்தும் செய்யப்படும் என்று திரு. கே.கே.வேணுகோபால், கற்றறிந்த அரசு தலைமை வழக்குரைஞர் உறுதி அளித்தார்."

7. 29.01.2018 அன்று, தே.ப.தீ., தனி நபர் உறுப்பினர், மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த காலதாமத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தை அவர் முன்னிலையாகாததால் தள்ளுபடி செய்தார். தனி நபர் உறுப்பினர் வழங்கிய உத்தரவு கீழ்க்கண்டவாறு:

"மனுதாரர் ஆஜராகவில்லை.

இவ்வழக்கில், மனுதாரர் ஆஜராகாததன் கவனமின்மையை சுட்டிக்காட்டி, இவ்விண்ணப்பத்தை தள்ளுபடி செய்யும்படி அனைத்து எதிர்மேல்முறையீட்டாளர்களும் ஒன்றிணைந்து கூறினர்.

ஆவணங்கள் பார்வையிடப்பட்டன. எதிர்மேல்முறையீட்டாளர்கள் வழக்கை நடத்த ஆர்வம் கொள்ளவில்லை என்று சுட்டிக்காட்டியதால் எம்.ஏ.எண்.262/2017 எனும் விண்ணப்பம் செலவுத் தொகையின்றி நிராகரிக்கப்படுகிறது."

அரசாணையின் செல்லுந்தன்மையை எதிர்க்கும் இம்மனுவில், தே.ப.தீ–ன் தலைவர் தனி நபர் உறுப்பினர் அமர்வை அமைக்கக் கூடாது என்றும் ஒவ்வொரு அமர்வும் ஒரு நீதித்துறை சார்ந்த உறுப்பினரையும், ஒரு வல்லுநர் உறுப்பினரையும் கொண்டிருக்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் 31.01.2018 அன்று உத்தரவிட்டது. இதன்பிறகு, தே.ப.தீ., பொறுப்பு தலைவர், தனி னவர் உறுப்பினர் அமர்வு எந்த பிராந்திய

அமர்விலும் அமைக்கலாகாது என்ற உடனடி அமலாக்க உத்தரவை பிறப்பித்தார்.

8. மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞர் 29.01.2018 (எம்.ஏ.3/2019) தேதியிட்ட தனி நபர் உறுப்பினர் உத்தரவை திரும்ப பெற கோரும் விண்ணப்பமும், கால தாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்துடன், திரும்பப்பெற (எம்.ஏ.4/2019) கோரும் உத்தரவுக்கு பிறகு ஒரு வருடம் கழித்து தாக்கலாயின. அந்த விண்ணப்பங்கள் தாக்கலாகி இரண்டு வருடங்கள் கழித்து விசாரணைக்கு வந்துள்ளன. தீர்ப்பாயம் 16.07.2021 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் ஒருவேளை உத்தரவை திரும்ப பெற கோரும் மனுவை அனுமதித்தாலும் கால தாமதத்தை மன்னிக்கக் கோரும் மனுவை ஏற்க இயலாது என்ற கருத்துரையுடன் இரு விண்ணப்பங்களையும் தள்ளுபடி செய்தது. மேல்முறையீட்டாளர் காலதாமதத்தை மன்னிக்கக் கோருவதற்கான ஒரே அடிப்படை காரணம் யாதெனில், சுற்றுச்சூழல் தடை நீக்க சான்றை பெற்றது தங்களுக்கு தெரியாது என்பதே ஆகும் என்று தீர்ப்பாயம் குறிப்பிட்டது. சுற்றுச்சூழல் தடை நீக்க உத்தரவு முறைப்படி பதிவேற்றம் செய்யப்பட்டதால், அவ்வுத்தரவு பதிவேற்றம் செய்யப்பட்ட நாளிலிருந்து வரையறை காலம் கணக்கிடப்படவேண்டும் என்ற கூற்றைஏற்க இயலாது என்று தீர்மானிக்கப்பட்டது. கருத்துரைத்ததாவது:

> "நாங்கள் திரும்ப பெற கோரும் கோரிக்கையை அனுமதித்தாலும், மேல்முறையீட்டை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் குறித்து எம்.ஏ.எண்.262/2017(மே.ம) பம்போர் கிராம பஞ்சாயத்து மற்றும் பலர் –எதிர்– சுற்றுச்சூழல், வன அமைச்சகம் மற்றும் பலர் எனும் வழக்கில் மேல்முறையீட்டாளர் வில்லங்க சான்றிதழ் வழங்கியதை குறித்து அறியவில்லை என்ற காரணத்தை

ஏற்கமுடியாது என்ற சங்கதி உள்ளது. வில்லங்க சான்றிதழ் முறையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது, தனி நபரின் அறிதல் என்பது ஆரம்ப கட்டமல்ல. வில்லங்க சான்றிதழ் 05.01.2017 அன்று வழங்கப்பட்டது, அவ்வாறிருக்கையில் வரையறுக்கப்பட்ட காலத்தை தாண்டி தீர்ப்பாயம் மன்னிக்கக்கூடிய வரையறை காலத்திற்கப்பால் 19.04.2017 அன்று மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது."

9. தேசிய பசுமை தீர்ப்பாய சட்டம் 2010–ன் பிரிவு 4(4)(இ)–ன் படி, தனி நபர் உறுப்பினுள் அமர்வு ஏற்புடையதல்ல என்று கூறி தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து 29.01.2018 அன்று தனி நபர் உறுப்பினர் பிறப்பித்த உத்தரவு செல்லாது என மேல்முறையீட்டாளர் வழக்கு பதிவு செய்தார். மேல்முறையீட்டாளர் மேலும் தெரிவித்ததாவது, தனது முந்தைய வழக்குரைஞர் கோப்பினை, தான் அரசு வழக்குரைஞர் ஆனதாக கூறி திருப்பி தந்ததாகவும், ஆயினும், தீர்ப்பாயத்தின் கவனத்திற்கு அவர் இந்த செய்தியை கொண்டு சென்றுள்ளதாகவும், தெரிவித்ததாக கூறினார். மேல்முறையீட்டாளர் மேலும் வலியுறுத்தியதாவது; பின்னர் ஏற்பாடு செய்த வழக்குரைஞர் விசாரணை பற்றி எந்த அறிவிப்பும் தரவில்லை, உண்மையில் இது, இருந்தபோதிலும், நீண்ட இடைவெளிக்குப் பிறகு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளது. இவ்வாறாக மேல்முறையீட்டாளர் இயற்கை நீதிக் கோட்பாடுகளை மீறியதாக சமர்ப்பித்துள்ளார்.

10. இந்த சமர்ப்பணங்களுக்கு எதிராக நான்காவது எதிர்மேல்முறையீட்டாளர் வாதிட்டதாவது:

(i) 05.01.2017 அன்று சுற்றுச்சூழல் தடை நீக்க உத்தரவு அனுமதி தெரிவிக்கப்பட்டது, அதில் போதுமான காரணம்

காட்டப்பட்டாலுங்கூட, 90 நாட்களுக்கு மேலான காலதாமதத்தை மன்னிக்கும் அதிகாரம் தே.ப.தீ., சட்டம் 2010, பிரிவு 16–ல் தீர்ப்பாயத்திற்கு வழங்கப்படவில்லை;

(ii) மேல்முறையீட்டாளர் பல தருணங்களில் தீர்ப்பாயம் முன்பு முன்னிலையாகவில்லையென்பதால் அவர் கவனக்குறைவாக உள்ளார் என்பதாகும்; மேலும்,

(iii) தனி நபர் உறுப்பினர் அமர்வை அமைக்க முடியாது என்ற இந்நீதிமன்றத்தின் உத்தரவானது இரண்டு நாட்களுக்கு பின்னர் அதாவது, 31.01.2018 அன்று பிறப்பிக்கப்பட்டதால், 29.01.2018 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சமயத்தில் தனி நபர் உறுப்பினர் அமர்வு, அதிகாரவரம்பிற்குட்படாது என்று கூறமுடியாது.

11. காலதாமதத்தை மன்னிக்கும் மற்றும் மீள் கொணரும் விண்ணப்பங்கள் மீது இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் தனது வாக்குறுதியை இந்த நீதிமன்றத்துக்கு 11.01.2018 அன்று அளித்து விதி 3–ல் உள்ள வழிமுறை சட்டம் மற்றும் இந்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு ஒட்டி சரி செய்யப்படும் என்று கூறிய பிறகும் 29.01.2018 அன்று தனி நபர் அமர்வு தள்ளுபடி செய்தது சரியா என்பதே இந்த நீதிமன்றம் முன்பு உள்ள பிரச்சனை ஆகும். 31.01.2018 அன்று இந்த நீதிமன்றம் தே.ப.தீ., தலைவருக்கு தனி நபர் உறுப்பினர் அமர்வை அமைக்க வேண்டாம் என உத்தரவிட்டிருந்தது.

12. தே.ப.தீ–ன் தனி நபர் உறுப்பினர், காலதாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை 29.01.2018 அன்று தள்ளுபடி செய்தார், மற்ற வழக்குகளில் தனி நபர் அமர்வை அமைக்க தடை இருப்பதாக கூறி நீதிமன்ற உத்தரவை பிறப்பிக்காமல் விலகி இருந்தார். 23.01.2018 (கோவா பவுண்டேஷன்,

அதன் செயலர் மூலம் –எதிர்– கோவா சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (அ.வி.எண்.156/2016)) அன்று உத்தரவில் உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்:

> "தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்கள் முன்னிலையானார்கள். தீர்ப்பாயத்தின் நீதியர் ஆயத்தை அமைப்பது குறித்து தடை இருப்பதால் விசாரணையை பிறகு தள்ளிவைக்க, இருதரப்பாரும் கோரினர். வேண்டுகோள் ஏற்கப்பட்டது. மேல்விசாரணையை மார்ச் முதல் நாள் 2018 அன்று பட்டியலிடவும்."

மற்ற வழக்குகளிலும் (ராஜ்பாவ் பவார் –எதிர்– கோவா மாநில அரசு சார்பாக அதன் தலைமைச் செயலாளர் (அ.வி.எண்.97/2016); கோவா பவுண்டேஷன் –எதிர்– கோவா மாநில அரசு இ.ஐ.ஏ.ஏ. (அ.வி.எண்.33/2015)) இதே போல உத்தரவுகள் இடப்பட்டன, மேல்முறையீட்டாளரின் காலதாமதத்தை மன்னிக்கக் கோரும் விண்ணப்பத்தை தனி நபர் உறுப்பினர் தள்ளுபடி செய்தார், ஆனால் மற்ற வழக்குகளில் இந்த நீதிமன்றத்தில் இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் அளித்த வாக்குறுதி காரணமாக எந்த உத்தரவையும் இடவில்லை. 11.01.2018 அன்று இந்நீதிமன்ற உத்தரவு குறிப்பிடுவதாவது, எதிர்க்கப்பட்ட விதியை சட்டப்படியும், இந்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளை ஒட்டி சரி செய்யப்படும் என இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் வாக்குறுதி தந்ததாக உள்ளது. குறிப்பாக எந்த பதிவும் தடை உத்தரவையும் இந்நீதிமன்றம் விதித்ததாக இல்லை என்பது உண்மை. இந்நீதிமன்றத்தில் அரசு தலைமை வழக்குரைஞர் முழுமையான வாக்குறுதியை மூல சட்டம் மற்றும் இந்நீதிமன்றத்தின் முடிவுகளுக்கு ஏற்ப ஒத்துப்போகும்படி திருத்தம் செய்யப்படும் என்ற அவரது அணுகுமுறை உணரப்படுகிறது.

அறுதியிடப்பட்ட கோட்பாடு என்பது ஒப்படைவு பெட்ரா சட்டம் இயற்றுதல், அதனை இயற்ற அனுமதித்த சட்டங்களுக்கு ஒத்ததது போல இருக்கவேண்டும் என்பதே நிறைவானது ஆகும். ஒரு விதியானது, அதிகார மூலத்திற்கு மேலாக இருத்தலாகாது. அரசு தரப்பு தலைமை வழக்குரைஞர் இந்நீதிமன்றத்தின் முன்பு உறுதியளித்து, அது அறியப்படும்பொழுது தே.ப.தீ–யில் ஒரு நிலையான சட்ட நடவடிக்கை பின்பற்றப்படும் என்று உரிமையாளர் உறுதியளித்தார். 31.01.2018 அன்று இந்நீதிமன்றம் உத்தரவிட்டதாவது "இதனிடையே, தனி நபர் உறுப்பினர் அமர்வை தலைவர் உருவாக்கலாகாது....." "இதனிடையே" என்ற சொற்றொடர் விளக்குவதாவது, சட்டம் மற்றும் தீர்ப்புகளுடன் விதியின் முரண்பாடு குறித்து நிர்வாகம் ஆலோசிக்கும் சமயத்தில் அதை செயல்படுத்துவதில் தடையுள்ளது என்பதாகும். இந்நீதிமன்றத்தின் உத்தரவில் உள்ள சொற்றொடர் விரும்புவதாவது, விதி வழங்கியுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி தனி நபர் உறுப்பினர் அமர்வு உருவாக்குவதில் தடை இருக்கும் என்பதை இது தெரிவிக்கிறது. தனி நபர் உறுப்பினர் அமர்வின் அதிகார வரம்பு குறித்த ஊகம் பிழையானது என தெளிவாக தெரிகிறது. தே.ப.தீ., சட்டம் 2010–ன் பிரிவு 4(4)(இ)–ன்படி நீதி சார்ந்த உறுப்பினர்களுக்கு இணையாக வல்லுநர் உறுப்பினர்கள் இருக்கவேண்டும் அல்லது ஒருவரது அமர்வில் இருந்து விசாரிக்க வேண்டும் என வழிமுறை உள்ளதால் தனி நபர் உறுப்பினர் உத்தரவு பிறப்பித்து இருத்தல் கூடாது.

13. தே.ப.தீ. வழங்கிய 16.07.2021 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவை நீக்கறவு செய்து, மேல்முறையீட்டை நாங்கள் அனுமதிக்கிறோம். தே.ப.தீ. வழங்கிய 29.01.2018 தேதியிட்ட அசல் உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. மேல்முறையீடு எண்.36/2017

கோப்பில் மீள்கொணரப்பட்டு தே.ப.தீ. மீண்டும் விசாரிக்க உத்தரவிடப்படுகிறது. வழக்கு நபர்களின் வாதங்கள், காலவரையறை விவகாரம் உள்பட தெளிவாக உள்ளன. மேல்முறையீட்டில் நற்கூறுகளில் இந்த நீதிமன்றம் எந்த கருத்தையும் வெளிப்படுத்தவில்லை.

14. ஏதேனும் விண்ணப்பங்கள் நிலுவையில் இருப்பின் அவை முடித்து வைக்கப்படுகின்றன.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."